பாடம் 1

# இராட்சதர்களும் வெட்டுக்கிளிகளும்

***என் செல்லமே! இதுவரையிலும் போகாத இடத்திற்கு நீ உன் வீட்டாருடன் சென்றது உண்டா? அல்லது பள்ளியில் ஆசிரியருடனும் நண்பர்களுடனும் சென்றது உண்டா? அவ்வாறு செல்வது ஜாலியான அனுபவமாக இருக்கும். இஸ்ரவேலர் பெற்ற அத்தகைய அனுபவத்தை இப்போது பார்ப்போமா?***

எகிப்திலிருந்து செங்கடலின் விளிம்பு வரையிலும் இஸ்ரவேலரை மோசே வழிநடத்திக் கொண்டு வந்துவிட்டார். அதன் பின்னர் எங்கே போவது என எவருக்கும் தெரியவில்லை. ஆனாலும் தேவனுக்கு நன்றாகவே தெரியும். எனவே தேவன் இஸ்ரவேலரை மேகஸ்தம்பத்தின்மூலம் வழிநடத்தினார். அந்த மேகஸ்தம்பம் பகலிலே குளிர்ச்சியையும்இரவிலே பாதைக்கு வெளிச்சத்தையும், வெப்பத்தையும் அளித்தது. தேவன் தங்களுக்கு வாக்குப் பண்ணிய இடத்தின் அருகே வரையிலும் இஸ்ரவேலர் வந்து சேர்ந்துவிட்டார்கள். தேவன் சொல்லியபடியே மோசே, ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு தலைவனைத் தேர்வுசெய்தார்.

அவ்வாறு தேர்வு செய்தவர்களை மோசே அருகில் அழைத்தார். தேவன் தங்களுக்குச் சுதந்தரமாகத் தரப்போகிற கானானைச் சுற்றிப்பார்த்து வருமாறு அனுப்பினார். தேசத்தின் கனிகளில் சிலவற்றைக் கொண்டுவரும்படி கூறினார்.

அவ்வாறே சுற்றிப்பார்த்து நாற்பதுநாள் கழித்து மோசேயிடம் வந்தனர். கானானிலே அப்போது திராட்சப்பழம் பழுக்கும் காலம். எனவே, அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சக் கொடியை அறுத்தார்கள். அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

மோசே அனுப்பிய 12



## மனன வசனம்

**ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்.**

**எபிரெயர் 10:25.**

பேரில் யோசுவா, காலேப் இரு வரைத் தவிர அந்தப் பத்துப் பேரும் கானான் தேசத்தைப் பற்றி முதலில் கூறினார்கள். அவர்கள் மோசேயையும் மக்களையும் பார்த்து, "தேவன் நம்மிடம் சொன்னபடியே, அது செழிப்பான தேசம்தான். அருமையான கனிகள் நிறைந் துள்ள தேசம். தேசத்தின் பட்டணங்கள் பெரியவை களும், கோட்டைகள் சூழ்ந்தவைகளுமாய் உள்ளன. மக்களும் இராட்சதர்கள் போல் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னே நாம் வெட்டுக்கிளிகள் போன்றவர்கள்தாம். அவர் களை நாம் வெல்லமுடியாது" என்றனர்.

அதைக் கேட்ட ஜனங்கள் மோசே, ஆரோனுக்கு விரோத மாக முறுமுறுத்தனர். அழத் தொடங்கினர். ஆனால் காலேபும், யோசுவாவும் ஜனங்களிடம், "இதோ எங்கள் தோள்களிலுள்ள கனிகளைப் பாருங்கள். செழிப்பான அந்தத் தேசத்தை தேவனால் நாம் எளிதாக வெல்லலாம். எதற்காகவும் நீ ங்கள் அழவோ, குறைகூறவோ தேவை யில்லை" என்றனர்.

அந்தப் பத்துப்பேரின் பேச்சைத் தான் இஸ்ரவேலர் நம்பினார் கள். எனவே, "எகிப்து தேசத் திலே நாங்கள் செத்துப் போனால் நலமாயிருக்கும். நாங்கள் கொள்ளையாகும்படி இந்தத் தேசத்திற்குக் கொண்டு வந்தது என்ன?" எனக் கோபத்தில் கத்தினார்கள். மீண்டும் எகிப்து தேசத்திற்கே திரும்பிப்போவதாகக் கூறி னார்கள்.

"கர்த்தருக்கு விரோத மாகப் பேசாதீர்கள்" என்று மோசே எச்சரித்தார்; கெஞ்சி னார். யோசுவாவும், காலேபும் வேதனையுடன் தங்கள் ஆடை களைக் கிழித்துக்கொண்டனர்.



## செய்தி

**கர்த்தரைப் பின்பற்றும்படிக்கு மற்றவர்களை நாம் உற்சாகப்படுத்தவேண்டும்.**

மக்களிடம், தேவன் நமக்கு வாக்களித்த கானான் தேசம், மிகவும் நல்ல தேசம்; தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யாதேயுங்கள் எனக் கெஞ்சினார்கள். மக்களோ அவர்கள்மேல் கல்லெறிய முற்பட்டார்கள்.

அப்போது தேவன் வந்தார். ஆசரிப்புக் கூடாரத்தின்மேல் தேவமகிமை காணப்பட்டது.

“காலேப், யோசுவா தவிர என் வார்த்தைகளை நம்பாத ஒருவர்கூட வாக்குப்பண்ணப்பட்ட அந்தக் கானானுக்குப் போவதில்லை. அவர்கள் பிள்ளைகள்மட்டுமே கானானைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்” என்றார்.

என் செல்லமே! யோசுவாவும் காலேபும் தேவனை நம்பியதுபோல் நீயும் தேவனை உன் வாழ்நாள் முழுவதும் நம்புவாயா?

***செய்முறை:*** *இன்றைய பாடத்தில் ஒரு செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. அதைக் கண்டறிய, இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தைப் பார். அந்த வாக்கியத்தில் ஒவ்வொரு இரண்டாவது வார்த்தையையும் வெட்டிவிட்டால், சரியான பதில் கிடைக்கும்.*

### புதிர் 1

